RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 323 | நவம்பர்.23 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## காஞ்சியில் மக்களை சந்திக்கும் விஜய்: முக்கிய அறிவுறுத்தல்களை வெளியிட்ட புஸ்ஸி ஆனந்த்



சென்னை, நவ.23-

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நாளை (நவ.23) காஞ்சிபுரம் ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மக்களை சந்திக்கும் நிலையில், அதுகுறித்து முக்கிய அறிவுறுத்தல்களை அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக தவெக பொதுச்செயலாளர் ஆனந்த் வெளியிட்ட அறிக்கையில், "தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் கலந்து கொள்ளும் உள்ளரங்கு மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நாளை (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க உள்ளரங்கு சந்திப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த, QR குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 2000 பேர் மட்டுமே இந்த உள்ளரங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. கழகத்தினரும் பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

கரூர் சம்பவத்துக்குப் பிறகு பொதுமக்களை சந்திக்காமல் இருக்கும் தவெக விஜய், நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் மக்கள் சந்திப்பை நடத்த திட்டமிட்டுள்ளார்.

தவெக தலைவர் விஜய் கடந்த செப்.27ம் தேதி கரூரில் பிரச்சாரம் மேற்கொண்டபோது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதன் பிறகு பொது நிகழ்வுகளில் விஜய் பங்கேற்காமல் இருந்து வந்தார். இதனிடையே, கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னைக்கே அழைத்து ஆறுதல் கூறினார்.

அண்மையில் கட்சியின் சிறப்பு பொதுக்குழுவை கூட்டிய விஜய், மீண்டும் மக்கள் சந்திப்புக்கு அவர் ஆயுத்தமானார். இதற்காக தமிழகம் முழுவதும் 4 ஆயிரம் பேரை தேர்வு செய்து 'மக்கள் பாதுகாப்புப் படை'யை உருவாக்கினார். அவர்களுக்கு ராணுவம் மற்றும் காவல்துறையில் ஓய்வுபெற்ற அதிகாரிகளை கொண்டு பயிற்சியும் அளித்தார்.

இந்நிலையில், சேலத்தில் இருந்து டிச.4ம் தேதி முதல் மீண்டும் பிரசாரத்தைத் தொடங்க விஜய் முடிவு செய்தார். ஆனால் திருவண்ணாமலை திருக்கார்த்திகை திருவிழா உள்ளிட்ட சில பாதுகாப்புக் காரணங்களால் வேறு ஒரு தேதியில் பிரசாரத்தை வைத்துக்கொள்ள போலீஸார் அறிவுறுத்தினர்.

இதற்கிடையே, நாளை காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். இதற்காக கல்லூரி வளாக உள் அரங்கத்தில் போதுமான அளவு இருக்கைகளும், தடுப்பு வேலிகளும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. காலை 10 மணிக்கு இந்த சந்திப்பு நடத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## கோவை, ஈரோடு மாவட்டங்களில் கள ஆய்வு: முதல்வர் ஸ்டாலின் 2 நாள் சுற்றுப்பயணம்




சென்னை: நவ.23-

நவம்பர் 25 கோவையிலும், நவம்பர் 26 ஈரோட்டிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு மேற்கொள்ள இருக்கிறார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தமிழக முதல்வர் ஸ்டாலின் கள ஆய்வுப் பணிகளுக்காக கோவை, ஈரோடு மாவட்டங்களுக்கு நவ.25, 26 ஆகிய இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

நவ, 25 அன்று காலை கோவையில் செம்மொழிப் பூங்காவை திறந்துவைக்கிறார். மாலையில் தொழில்துறை சார்பில் பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் நடைபெறும் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

நவ.26 அன்று காலை ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தினை திறந்து வைக்கிறார். அதைத் தொடர்ந்து தீரன் சின்னமலை மணிமண்டபம் சென்று, அவரது திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செய்கிறார்.

சோலார் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும் அரசு விழாவில் ரூ.605 கோடியில் முடிவுற்றப் பணிகளைத் தொடங்கிவைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,84,491 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மாலையில், சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில் பால்வளத் தந்தை பரமசிவன் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கிறார். இவ்விழாவில், அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மெட்ரோ ரயில்களுக்கு அனுமதி மறுப்பு மத்திய அரசின் வஞ்சனை" - அமைச்சர் சிவசங்கர்



அரியலூர், நவ.23-

மத்திய அரசு வஞ்சகத்தோடு தான் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரயில்களுக்கு அனுமதி வழங்காமல் நிறுத்தி இருக்கிறார்கள் என போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில், "தமிழகத்தில் இயங்கி வருகின்ற பழைய பேருந்துகளை எல்லாம் மாற்றி புதிய பேருந்துகள் இயக்குவதற்கு தமிழக முதல்வர் உத்தரவிட்டதன் அடிப்படையில், புதிய பேருந்துகள் கடந்த ஆண்டிலிருந்து படிப்படியாக மாற்றப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்று அரியலூரில் நான்கு பழைய வழித்தடங்களில் இயங்கிக் கொண்டிருந்த பழைய பேருந்துகள் மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

அதேபோல செந்துறையில் ஐந்து புதிய பேருந்துகள் வழக்கத்தில் கொண்டுவரப்படுகிறது. பொதுமக்கள் பழைய பேருந்துகளிலேயே பயணப்பட்டு சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையை மாற்றி இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதேபோன்று புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இயந்திரம் மூலம் டிக்கெட் வழங்குவது தமிழ்நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளது.

சென்னையில் மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தற்போது, 750 பேருந்துகள் சிஎன்ஜி பேருந்துகளாக மாற்றுவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. தொலைதூரம் இயங்குகின்ற அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 20 வால்வோ பேருந்துகள் வாங்குவதற்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டிருக்கிறார். இது அடுத்த மாதத்தில் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது.

போக்குவரத்துத் துறையில் ஜிபே முறைக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. படிப்படியாக அந்தப் பயன்பாடு அதிகரித்து வருகிறது. மக்கள் அதை பயன்படுத்துகிறார்கள்.

மின்சாரப் பேருந்துகளைப் பொறுத்தவரை 'ஜிசிசி மெத்தட்' என்கிற ஒப்பந்த அடிப்படையில் இயக்குவதற்கான நடவடிக்கையை நாம் எடுத்து அந்தப் பணியை சென்னையிலே தொடங்கி விட்டோம். ஆனால் மத்திய அரசு இப்பொழுது தான் கொண்டு வருகிறார்கள். நாம் அதற்காக புதிய பேருந்துகளை வாங்க வேண்டும் என்றால் மின்சாரப் பேருந்துகள் மிகுந்த விலை கொண்ட பேருந்துகளாக இருக்கின்றன . அவற்றைப் அந்த நிறுவனங்களே பராமரித்தால் தான் சரியாக இருக்கும். அதன்பேரில், ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பித்தவர்களுக்கு அந்த டெண்டர் அடிப்படையில் வழங்கப் பட்டிருக்கிறது.

எனவே நம்முடைய மாநிலத்துக்கு எது உகந்ததாக இருக்குமோ அந்த அடிப்படையில் செய்கிறோம். மெட்ரோ ரயிலை பொறுத்தவரை கோவை, மதுரையில் மக்கள் தொகை குறைவாக இருக்கிறது என்கின்ற ஒரு காரணத்தை தான் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட குறைவாக இருக்கின்ற வட இந்தியாவில் இருக்கின்ற இந்தூர் போன்ற நகரங்களில் இந்த மெட்ரோ ரயிலை துவக்கி இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் வாரத்துக்கு 80 பேர் பயணிக்கின்ற நிலையெல்லாம் பல மெட்ரோ ரயில்களில் இருக்கிறது. ஆனால் நிச்சயமாக கோவையிலும், மதுரையிலும் இது பெருமளவில் மக்கள் பயன்பாட்டுக்குச் சரியாக இருக்கும் என்கின்ற காரணத்தினால் தான் நாம் இதைக் கேட்டிருக்கின்றோம்.

பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் வானதி சீனிவாசன், அடுத்து எங்கள் ஆட்சி அமைந்தால் நாங்கள் மெட்ரோ ரயிலைக் கொண்டு வருவோம் என்று சொல்கிறார்.

நயினார் நாகேந்திரன் அவர் ஊருக்காக சொல்கிறார் என்கிறார். அந்தக் கட்சியிலே முதலில் அவர்களுக்கு ஒருமித்த கருத்து இல்லை. எப்படி தமிழ்நாட்டை ஏமாற்றுவது என்கின்ற எண்ணத்தில் வெவ்வேறு குரலிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக நீட் தேர்வில், புதிய கல்வி கொள்கையை அறிமுகப்படுத்துவதில், மாநில உரிமைகளை பறிப்பதில், ஆளுநரை வைத்து சட்டங்களுக்கு அனுமதி கொடுக்காமல் தடுப்பதில் மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு வஞ்சகம் செய்து வருகிறதோ அதே வஞ்சகத்தோடு தான் மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரயில்களுக்கு அனுமதி வழங்காமல் நிறுத்தி இருக்கிறார்கள்.

இது அப்பட்டமாய் அரசியல் செய்வதுதான். இப்படி எல்லாம் செய்தால் தமிழ் நாட்டு மக்கள் தங்களுக்கு பயந்து கொண்டு ஆதரவு கொடுப்பார்கள் என்ற எண்ணத்தில் இருக்கி றார்கள். ஆனால் தமிழ்நாட்டை பொறுத்தவரை இந்த திட்டங்களை எல்லாம் நாம் நம்முடைய நிதியை வைத்தே அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முதல்வர் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே கல்விக்கு நமக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் கல்விக்கான பணியை மிகத் தீவிரமாக நம்முடைய முதல்வர் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஆங்கில கற்றல் திறனை மேம்படுத்த நீலகிரி அரசு பள்ளிகளில் 'ஜாலி போனிக்ஸ்' திட்டம் தொடக்கம்



ஊட்டி, நவ.23-

நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆங்கில கற்றல் திறனை அதிகப்படுத்தும் வகையில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் வேடிக்கை முறையிலான 'ஜாலி போனிக்ஸ்' திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை சார்பில் குன்னூர், ஊட்டி, கூடலூர், கோத்தகிரி வட்டாரங்களில் இருந்து 20 அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊட்டியில் சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

மாணவர்களின் வாசிப்பு, எழுத்து, சொல் உச்சரிப்புத் திறன்களில் முன்னேற்றம் காணுதல், வகுப்பறை ஈடுபாட்டை அதிகரித்தல், ஆங்கில உச்சரிப்பை மேம்படுத்துதல், தொடக்க நிலை மாணவர்கள் ஆங்கிலத்தை நம்பிக் கையுடன் பயன்படுத்துதல் போன்ற முன்னேற்றச் செயல்பாடுகள் குறித்து ஆசிரியர்களுக்கு ஜாலி போனிக்ஸ் இந்தியா நிறுவன பயிற்சியாளர் கோமதி பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் புத்தகங்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மாவட்ட கல்வி அலுவலர் சின்னமாது, உதவித் திட்ட அலுவலர் அர்ஜுனன், மாவட்ட ஆட்சியர் நேர்முக எழுத்தர் (கல்வி) பிரமோத், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து கல்வித்துறை அதிகாரிகள் கூறியதாவது: ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கு, செயற்கை ஒலியியல் மூலம் ஆங்கில எழுத்தறிவு கற்பிப்பதற்கு வேடிக்கையான மற்றும் குழந்தைத்தனமான அணுகுமுறையே 'ஜாலி போனிக்ஸ்' பயிற்சி முறை என அழைக்கப்படுகிறது. தனியார் பள்ளிகளில் மட்டும் இருந்த இப்பயிற்சி, தனியார் அமைப்புகள் சார்பில் அரசுப் பள்ளிகளிலும் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 'ஜாலி போனிக்ஸ்' மற்றும் 'ஜாலி கிராமர்' பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், தமிழ்வழி பயிலும் மாணவர்கள், ஆங்கில எழுத்துகளில் உச்சரிப்பை எளிமையாக கற்க முடியும், என்றனர்.



■ கரூர் மாவட்ட ஆட்சியர் திரு. மீ.தங்கவேல் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர்கள் திரு. கு.விமல்ராஜ். மற்றும் இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.ச.சிங்காரம் ஆகியோர் உள்ளனர்.

## மதுரையில் டிச.3 வரை உணவுத் திருவிழா சிறப்பு அம்சங்கள் என்னென்ன?

சென்னை, நவ.23-

மதுரையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவுத் திருவிழாவை இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இது தொடர்பாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களது தயாரிப்பு பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை 'சாராஸ்' எனப்படும் விற்பனை கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து மதுரை, தமுக்கம் மைதானத்தில் மதி கண்காட்சி (சாராஸ் மேளா) மற்றும் உணவுத் திருவிழாவை வரும் நவ.22ம் தேதி முதல் நடத்துகிறது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழாவை தொடங்கி வைத்து, சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குகிறார். நவ. 22 முதல் டிச. 3ம் தேதி வரை நடைபெறும் கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழாவுக்கு அனுமதி இலவசம். பொதுமக்கள் காலை 10 முதல் இரவு 8 மணி வரை பார்வையிடலாம்.

மாலை நேரங்களில் தப்பாட்டம், கரகாட்டம், தெருக்கூத்து, நடனம், மேற்கத்திய இசை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் தமிழகம் முழுவதும் உள்ள சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களான சணல் பொருட்கள், துணிப்பைகள், ஐம்பொன் நகைகள், மரச் சிற்பங்கள், பட்டுப் புடவைகள், எம்ப்ராய்டரி ஆடைகள், கைத்தறி துண்டுகள், கைவினைப் பொருட்கள், கண்ணாடி ஓவியங்கள், பருத்தி ஆடைகள் போன்றவற்றை விற்பனை செய்யும் வகையில் 171 அரங்குகளும், பிற மாநிலங்களை சேர்ந்த பொருட்களை விற்பனை செய்ய 29 அரங்குகளும் நிறுவப்பட்டுள்ளன.

உணவுத் திருவிழாவில் 50 அரங்குகள் அமைக்கப் பட்டுள்ளன. இதில் கேரளாவின் பாரம்பரிய உணவுகளை விற்பனை செய்ய 2 அரங்குகளும், தமிழகத்தின் உணவுகளான கொங்கு மட்டன் பிரியாணி, மீன் பிரியாணி, கேரட் பாலி, செட்டிநாடு ஸ்நாக்ஸ், பள்ளிப்பாளையம் சிக்கன் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட உணவு வகைகளை சமைத்து பரிமாறும் வகையில் 23 அரங்குகளும் அமைக்கப் பட்டுள்ளன. இதுதவிர ஆயத்த உணவு வகைகளை விற்பனை செய்ய 25 அரங்குகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# கல்லலில் வட்டார அளவிலான அறிவியல் பழகு போட்டி நடைபெற்றது

கல்லல், நவ.23-

சிவகங்கை மாவட்டம் கல்லல் வட்டாரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை மற்றும் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு வானவில் மன்ற அறிவியல் பழகு போட்டி கல்லல் வட்டார வளமையத்தில் நடைபெற்றது. 21 பள்ளிகளைச் சேர்ந்த 25 மாணவ மாணவிகள் குழுத் தலைவராக இருந்து தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். இதையொட்டி நடைபெற்ற துவக்க விழாவிற்கு வட்டார கல்வி அலுவலர்கள் ரெக்ஸ், கோதை ஆகியோர் தலைமை தாங்கினர். தங்கள் உரையில் ஆய்வு மாணவர்களை பாராட்டியதோடு, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்தி வரும் குழந்தைகள் அறிவியல் மாநாட்டையும், மாணவர்களின் ஆய்வு சமுதாயத்திற்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், அறிவியல் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் எடுத்துரைத்தனர். கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி ,பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி, சாத்தரசன்பட்டி நடுநிலைப்பள்ளி அறிவியல் பட்டதாரி ஆசிரியர்கள் பிரபு, தனுசு ஸ்டாலின், ஆல்பர்ட் நடுவர்களாக செயல்பட்டனர். புதுப்புது சிந்தனையுடன் மாணவர்கள் தங்கள் அறிவியல் திறனை வெளிப்படுத்தி இருந்த விதம் பிரமிக்க வைத்தது. இப்போட்டியில் வைரவன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கிரித்திக் கௌதம ஆதித்யா வருண்குமார் குழு முதலிடத்தையும், தளக்காவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சபரி மாதவன் பிரசிதா சரண்யா குழு இரண்டாம் இடத்தையும், கல்லல் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி ஷிவானி சன்மதி அஸ்மிதா மூன்றாம் இடத்தையும் பெற்றது. கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. போட்டிகளுக்கான ஏற்பாடுகளை வட்டார வள மைய மேற்பார்வையாளர் சங்கீதா ஆசிரியர் பயிற்றுநர்கள் செபாஸ்டின் ஜெயராஜ், சசிகலா வானவில் மன்ற கருத்தாளர் ஜெனிட்டா மேற்கொண்டனர்.




### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி கீழ்கட்டளை பகுதி கழகம் சார்பில்

# 17வது வார்டு தர்கா சாலையில் விடியா தி.மு.க. அரசின் அவலங்களை எடுத்துரைக்கும் துண்டுப்பிரசுரங்கள் வழங்கினார்கள்

பல்லாவரம், நவ.23-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி கீழ்கட்டளை பகுதி கழகம் சார்பில் 17வது வார்டு தர்கா சாலையில் விடியா தி.மு.க. அரசின் அவலங்களை எடுத்துரைக்கும் துண்டுபிரசுரங்களை மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பொதுமக்களிடம் வழங்கினார். மாவட்டக் கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்டன்ற உறுப்பினர் பா.தன்சிங் தலைமையில் பல்லாவரம் பகுதி கழகச் செயலாளர் முன்னாள் நகரமன்ற துணை தலைவர் த.ஜெயப்பிரகாஷ் முன்னிலையில் கீழ்கட்டளை பகுதி கழகச் செயலாளர் ஞா.சந்திரசேகர் ராஜா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முன்னாள் நகர மகளிர் அணி செயலாளர் என்.நிர்மலா, முன்னாள் நகர மகளிர் அணி இணை செயலாளர் என்.மல்லிகா, 17வது கிழக்கு வட்டக் கழக செயலாளர் டி.ராமநாதன், 21வது வார்டு வட்ட கழக செயலாளர் என்.பாலசுப்ரமணியன், எல்.சரத் லோகநாதன், ப.ரஜினி, ஏ.கே.சிவமூர்த்தி, கீழ்க்கட்டளை பகுதி வட்ட கழக நிர்வாகிகள் எம்.விஜயன், ஜி.வஜ்ரவேல், டி.மணிமாறன், எம்.ராஜசேகர், சி.கே. செல்வம் , தாமஸ்மூர்த்தி, ஏ.தயாளன், பல்லாவரம் பிரசாத் பி.ஹரிஹரன், ஆர்.தேசிங்கு ராஜா , கே.அண்ணாமலை, எஸ்.தேவராஜ், பி.ஜெயக்குமார், பகுதி மகளிரணி விஜயலக்ஷ்மி, ஜாய் நிஷா, எம்.பூங்காவனம், ஆர்.கலைமதி, மற்றும் ஆர்.கவிராசு, எஸ்.விவேக், கிருஷ்ணா, கே.கார்த்திக் உட்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.

# மதுரை அப்போலோ கேன்சர் சென்டர் அமைதியான கொலையாளி என்ற ‘இரைப்பையை பாதுகாப்போம்‘ புற்றுநோய் விழிப்புணர்வு



மதுரை, நவ.23-

மதுரை அப்போலோ கேன்சர் சென்டர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவ சிகிச்சையில் நம்பிக்கையான ஓர் இடத்தை பெற்று வருகிறது. சிறப்பான மருத்துவ நிபுணர்களைக் கொண்டு மிக துல்லியமான உயர்தர கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் 360 டிகிரி ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சையை அளித்து வருகிறது. அதிநவீன தொழில்நுட்ப உதவியுடன், சர்வதேச தரத்தில் மருத்துவ சிகிச்சையை வழங்குவதில் அப்போலோ தனது அர்ப்பணிப்பை தொடர்ந்து வருகிறது. இது குறித்து அப்போலோ மருத்துவமனை, மதுரை மண்டலத்தின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். நிகில் திவாரி கூறிய போது “நிலிளிஙிளிசிகிழி 2020இன் படி இரைப்பை பற்றுநோய் உலகளவில் ஐந்தாவது பொதுவான புற்றுநோயாகும். அதேசமயம். இரைப்பை புற்றுநோய் பாதிப்பு விகிதத்தில் இந்தியா ஆறாவது இடத்தில் 4.5% பதிவாகியுள்ளது. ஒரு ஆய்வின் அடிப்படையில் கிழக்கு இந்தியாவில் இரைப்பை புற்றுநோய் பாதிப்பு அதிகபட்சமாக 70% ஆண்களுக்கு உள்ளது மிசோரம் மாநிலத்தில் ஆண் பெண் விகிதம் 23:1 ஆகவும், காஷ்மீரில் 33:1 ஆகவும் உள்ளது. ஆகையால் ஆண்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் ஆரம்பப் பரிசோதனையின் அவசரத் தேவையை வலியுறுத்துவது அவசியமாகிறது. மேலும் புற்றுநோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர்.டி.கே. சர்ப்பராஜன், டாக்டர். கே.பாலு மகேந்திரா கூறுகையில் இரைப்பை புற்றுநோயை பொறுத்தவரையில் துல்லியமான திக நோயறிதலில் faccu-rate tissue diagnosis) தொடங்குகிறது. பயாப்ஸி மாதிரிகளில் உள்ள சிறிய அசாதாரணங்கள் கூட அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பே ஆரம்ப நோயைக் குறிக்கலாம். ‘இரைப்பையை பாதுகாப்போம்‘ என்ற ஆரம்பக் கண்டறிதல் திட்டம் மூலம், பரிசோதனைக்கும் துவ்வியமான திகநோயியல் ஆய்வுக்கும் (லீவீஉமீஷீஜீணீமீலீஷீ ஷீரீஹ்) இடையேயான தொடர்பை நாங்கள் பலப்படுத்துகிறோம் இதன் மூலம் ஒவ்வொரு பயாப்ஸியும் மேம்பட்ட நுட்பங்களுடன் மதிப்பிடப் படுவதை உறுதிசெய்கிறோம். ஆரம்ப மற்றும் துல்லியமான நோயறிதல் சரியான சிகிச்சைக்கு வழிகாட்டுவதுடன். பாதிக்கப்பட்டவர்கள் புற்றுநோயில் இருந்து மீண்டுவர முடியும்.”

இந்நிகழ்வில் அப்போலோ மருத்துவமனை, மதுரை மண்டலத்தின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் நிகில் திவாரி, மருத்துவ சேவைகளின் இணை இயக்குனர் டாக்டர்.கே.பிரவின் ராஜன், புற்றுநோயியல் சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் பி.கே முத்துகுமாரசாமி, டாக்டர்.ஜே.தேவானந்த் டாக்டர்.டி.தீனதயாளன், புற்றுநோயியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் டி.கே.சர்ப்பராஜன், டாக்டர். கே.பாலு மகேந்திரா, கதிர்வீச்சு புற்றுநோயியல் நிபுணர்கள் டாக்டர், ஜே.ஜெபசிங், டாக்டர் ஜி சதிஷ் ஸ்ரீனிவாசன், மருத்துவ இரைப்பை குடலியல் நிபுணர்கள் டாக்டர்.பி. ராஜேஷ் பிரபு, டாக்டர் சி.பிரவின் குமார் மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு மூத்த மேலாளர் ஜே.பிரேம் டேனியல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ சென்னை மாதவரத்தில் SIR பணிகள் தொடர்பாக திமுக அதிமுகவினர் இடையே கைகலப்பு திமுக வட்ட செயலாளர் பிரேம்குமார், அதிமுக வட்ட செயலாளர் குமரவேல் இடையே வாக்குவாதம்

# குரூப் 1 பதவிக்கான மெயின் தேர்வு வரும் 1ம் தேதி தொடக்கம்: டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் ஹால்டிக்கெட் வெளியீடு

சென்னை, நவ.23-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) குரூப் 1 பதவியில் காலியாக உள்ள 70 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த ஏப்ரல் 1ம் தேதி வெளியிட்டது. இத்தேர்வுக்கான முதல்நிலை தேர்வுக்கு 2 லட்சத்து 49 ஆயிரத்து 296 பேர் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கான முதல்நிலை தேர்வு கடந்த ஜூன் 15ம் தேதி நடந்தது.

தேர்வை 1 லட்சத்து 86,128 பேர் மட்டுமே எழுதினர். இதற்கிடையில், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் காலி பணியிடங்களுக்கான எண்ணிக்கை 7லிருந்து 15 ஆக அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் முதல்நிலை தேர்வுக்கான ரிசல்டை டிஎன்பிஎஸ்சி கடந்த ஆகஸ்ட் 28ல் வெளியிட்டது. தற்காலிகமாக 1843 பேர் மெயின் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கான மெயின் தேர்வு (விரிந்துரைக்கும் வகை) வருகிற 1ம் தேதி முதல் 4ம் தேதி வரையும் மற்றும் 8ம் தேதி முதல் 10ம் தேதி வரையும் நடைபெற உள்ளது. மெயின் தேர்வு சென்னையில் மட்டும் நடைபெறும். குரூப் 1, 1ஏ பணிக்கான மெயின் தேர்வு எழுதும் விண்ணப்பதாரர்களின் தேர்வுக்கூட நுழைவு சீட்டு தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in, tnpscexams.in™ வெளியிடப்பட்டுள்ளது. ஒருமுறை பதிவேற்றம் மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவு சீட்டை பதிவிறக்கலாம் என டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சண்முக சுந்தரம் தெரிவித்துள்ளார்.



# மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் சார்பில் அன்னதானம்

மதுரை, நவ.23-

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மற்றும் அகில பாரத ஐயப்பா சேவா சங்கம் மதுரை மாவட்ட யூனியன் சார்பாக பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது மதுரை மாவட்ட தலைவர் குருசாமி தலைமையிலும்,மாவட்ட செயலாளர் பாலமுருகன், பொருளாளர் சின்னச்சாமி முன்னிலையில் தமிழ் மாநிலத் தலைவர் விஸ்வநாதன் மாநில செயலாளர் ஐயப்பன் அன்னதானத்தை தொடக்கி வைத்தனர். முன்னதாக கோவில் அலங்காவலர் குழு தலைவர் சத்யபிரியா கோவில் செயல் அலுவலர் யக்ஞ நாராயணன் ,அறங்காவலர் மணி செல்வம், பொம்ம தேவன், சண்முகசுந்தரம்,ராமையா ஆகியோர் குத்துவிளக் கேற்றினர் குத்து விளக்கேற்றினர். கோவில் அன்னதான கூடத்தில் சனிக்கிழமை முதல் மார்கழி மாதம் வரை பக்தர்களுக்கு காலையில் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.இந்த அன்னதான நிகழ்வில் திருக் கோவில் பணியாளர்கள், ஐயப்பா சேவா சங்க நிர்வாகிகள், ஐயப்ப பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர் பாலமுருகன், மனோகரன், மற்றும் மாவட்ட நிர்வாகம், நிர்வாகிகள், தொண்டர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்.

### தேனி மாவட்டம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக

# வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் BLO செயலியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு



தேனி, நவ.23-

தேனி மாவட்டம், தேனி வட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், பெரியகுளம் நகராட்சி அலுவலகம் மற்றும் கடமலை மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (Special Intensive Revision) மேற்கொள்வது தொடர்பாக, வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் BLO செயலியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், அன்று (21.11.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் நடைமுறைக்கு வரப்பெற்று, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதி களிலும் 04.11.2025 முதல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (Booth Level Officer - BLO) இல்லம் தோறும் சென்று, கணக்கெடுப்புப் படிவம் விநியோகம் செய்யப்பட்டு, சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், வாக்காளர்களால் விவரங்கள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் படிவங்களை திரும்ப பெற்று, BLO செயலியில் பதிவேற்றம் செய்து வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்று தேனி வட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், பெரியகுளம் நகராட்சி அலுவலகம் மற்றும் கடமலை மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் ஙிலிளி செயலியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வில் பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன், நகராட்சி ஆணையாளர்கள் செல்வி பார்கவி (தேனி அல்லிநகரம்), தமீஹா சுல்தானா (பெரியகுளம்), வட்டாட்சியர்கள் சதீஸ்குமார் (தேனி), .மருதுபாண்டி (பெரியகுளம்), .ஜாஹிர் உசேன் (ஆண்டிபட்டி), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் .மாணிக்கம், .ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# முருகனை உங்கள் வீட்டிலேயே தங்க வைக்கும் ரகசிய வழி இது தான்



முருகப் பெருமானின் அருள் நமக்கு கிடைக்க வேண்டும் என்பதை தாண்டி, முருகனின் தீவிர பக்தர்கள் முருகனின் தரிசனத்தை பெற வேண்டும். முருகப் பெருமான் எப்போதும் நம் உடனேயே இருக்க வேண்டும், முருகப் பெருமான் நம் வீட்டிற்கு வர வேண்டும் என விரும்புவது உண்டு. அப்படி முருகப் பெருமானை உங்களது வீட்டிற்கு வரவழைக்கும் ரகசிய வழி பற்றி தெரிந்து கொள்ளலாம்.

முருகப் பெருமானின் அருள் முழுமையாகக் கிடைக்க வேண்டும். உங்கள் வீட்டில் உள்ள கஷ்டங்கள், தீய சக்திகள் அனைத்தும் விலகி ஓட வேண்டும். முருகன் எப்போதும் உங்களுடன், உங்கள் வீட்டிலேயே தங்கி இருந்து, அருள் செய்ய வேண்டும் என்று நினைத்தால் இந்த ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ஒரு முறை செய்யுங்கள் போதும். நீங்கள் நினைத்ததை விட மிக அதிகமான பலன்கள் உங்களுக்கு கிடைக்கும்.

ஏதாவது ஒரு செவ்வாய் கிழமை, வளர்பிறை சஷ்டி அல்லது தேய்பிறை சஷ்டி, கார்த்திகை நட்சத்திரம் என முருகப் பெருமானுக்குரிய வழிபாட்டு நாளில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து விடுங்கள். ஒரு மஞ்சள் துணியை எடுத்துக் கொள்ளவும். அதில் ஐந்து மிளகு, ஒரு விரளி மஞ்சள் கிழங்கு, சிறிதளவு சுக்கு, பிரியாணி இலை, ஒரு ரூபாய் நாணயம் இவைகளை ஒன்றாக வைத்து ஒரு முடிச்சாக கட்டிக் கொள்ளுங்கள். பிறகு முருகப் பெருமானை மனதார வேண்டிக் கொண்டு இந்த மஞ்சள் துணி முடிச்சை எடுத்துச் சென்று, வீட்டின் நிலை வாசலில் கட்டி விடுங்கள்.

ஒரு வேளை பிரம்ம முகூர்த்த வேளையில் உங்களால் எழுந்து இந்த பரிகாரத்தை செய்ய முடியவில்லை என்றால் மேலே சொன்ன முருகனுக்குரிய நாட்களில் வரும் குளிகை நேரத்தில் இந்த பரிகாரத்தை செய்யலாம். தினமும் வீட்டில் பூஜை செய்யும் போது இந்த மஞ்சள் முடிச்சிற்கும் ஊதுபத்தி, சாம்பிராணி காட்டி வழிபட்டு வாருங்கள். இப்படி செய்வதால் முருகனின் அருளால் உங்கள் வீட்டில் உள்ள கடன், கஷ்டங்கள் அனைத்தும் ஓடிப் போகும். முருகனின் அருள் முழுவதுமாக கிடைக்கும். முருகனின் நடமாட்டம் உங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் தெரிய துவங்கும்.

இன்னும் விரைவாக பலன் கிடைக்க வேண்டும் என்றால், தினமும் வீட்டில் விளக்கேற்றி வைத்து, முருகன் படத்திற்கு முன் அமர்ந்து 10 திருப்புகழ் பாடல்களையாவது பாடுங்கள். 10 பாடல்கள் படிக்க முடியவில்லை என்றால், உங்களுக்கு பிடித்தமான அல்லது மனதிற்கு நெருக்கமான திருப்புகழ் பாடல் ஒன்றையாவது குறைந்தபட்சம் ஆறு முறை சொல்லி வழிபட்டு வாருங்கள். திருப்புகழ் எங்கெல்லாம் பாடப்படுகிறதோ அங்கு முருகன் நிச்சயம் வருவார் என அருணகிரிநாதரே தனது பாடலில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

முருகனின் தரிசனத்தையும், முருகன் உங்களுடன் இருந்து உங்களை காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர நினைப்பவர்கள் இந்த பரிகாரத்தை செய்வதுடன், திருப்புகழை மனம் உருக தினமும் பாடி வரலாம். திருப்புகழ் என்பது முருகப் பெருமானே அருணகிரிநாதரின் நாவில் இருந்து அருளியதாக சொல்லப்படுகிறது. இந்த படிப்பவர்களின் கர்மவினைகள் குறைய துவங்கும். முருகனின் அருள் கிடைப்பதற்கு தடையாக இருக்கும் கர்மவினைகள் முழுவதுமாக அழியும் போது முருகனின் அருளை பெறுவதுடன், முருகனின் அருள் நமக்கு இருப்பதையும் உணர முடியும். நம்பிக்கையுடன் இந்த வழிபாட்டினை செய்து பாருங்கள்.

# திருப்புகலூர் அக்னீஸ்வரர் கோயில்



சிற்பமும் சிறப்பும்

ஆலயம்: திருப்புகலூர் அக்னீஸ்வரர் கோவில், நாகப்பட்டினம் மாவட்டம்.

காலம்: 10 ஆம் நூற்றாண்டு, சோழர் காலம்.

அக்னி பகவான் இறைவனை நோக்கி தவம் செய்து பூஜித்ததால், அக்னி பகவானுக்கு பாவ விமோசனம் கொடுத்து, காட்சி தந்த தலமாதலால் இறைவன் ‘அக்னீஸ்வரர்’ என்ற பெயருடன் வணங்கப்படுகிறார்.

இறைவி பெயர்: கருந்தார் குழலி

63 நாயன்மார்களில் ஒருவரான முருக நாயனார் பிறந்த தலம் திருப்புகலூர். முருக நாயனாருக்கு இக்கோயிலில் தனிச் சந்நிதி உள்ளது.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரால் பாடல் பெற்ற தலம் என்ற பெருமையுடைய திருப்புகலூர், காவிரி தென்கரைத் தலங்களில் 75ஆவது சிவத் தலமாகும்.

‘எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ?
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன், மற்றோர் களைகண் இல்லேன்,
சுழல் அடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்,
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்,
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே’

என்று தொடங்கும் பதிகம் பாடி ‘அப்பர்’ என்றழைக்கப்படும் திருநாவுக்கரசர் இறைவனுடன் கலந்தது இத்தலத்தில்தான்.

கருவறையின் வெளிப்புறக் கோஷ்டங்களில் கணேசர், நடராஜர், பிரம்மா, அகத்தியர், லிங்கோத்பவர், துர்க்கை, பிட்சாடனர், ஆலிங்கன கல்யாண சுந்தரர் ஆகியோர் எழிலுற வடிக்கப்பட்டுள்ளனர்.

இக்கோவிலில் உத்தம சோழன் (பொ.ஆ. 970 985) காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள், முதலாம் ராஜராஜ சோழனின் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள், முதலாம் ராஜேந்திர சோழன் ( பொ.ஆ.10121044) காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் ராஜராஜனின் துணைவியார்களில் ஒருவரான பஞ்சவன் மகாதேவியாரால் ஒவ்வொரு ஆண்டும் கோயிலுக்கு திருவிழாக்கள் நடத்துவதற்கு அளிக்கப்பட்ட பல்வேறு கொடைகளை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இராஜராஜ சோழனின் சதய நட்சத்திரப் பிறப்பு பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு உள்ளது மற்றொரு சிறப்பு.இத்தலத்தில் சுந்தரருக்கு செங்கற்களை பொன்கற்களாக மாற்றி கொடுத்து அருளியதால், புதியதாக வீடு கட்டுபவர்கள், இக்கோயிலில் செங்கல் வைத்து வாஸ்து பூஜை செய்வது மிகவும் விசேஷம்.



# எனது மார்பிங் புகைப்படங்களை பரப்பியவர் 20 வயது பெண்! அனுபமா பரமேஸ்வரன் குற்றச்சாட்டு

நடிகை அனுபமா பரமேஸ்வரன், தனது மார்பிங் புகைப்படங்களைப் போலி சமூக வலைதள கணக்கு மூலம் பரப்பி வந்தது தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 வயது பெண் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் கூறியிருப்பதாவது: சில நாட்களுக்கு முன்பு என் பெயரில் போலியான இன்ஸ்டாகிராம் பக்கம் உருவாக்கி, அதில் என்னைப் பற்றியும், என் குடும்பம் , நண்பர்கள், சக நடிகர்கள் குறித்து தவறான தகவல்களைப் பரப்பி வருவதை அறிந்தேன். அடிப்படை ஆதாரமற்றத் தகவல்கள், மார்பிங் செய்யப்பட்ட புகைப்படங்கள் உள்ளிட்டவற்றைப் பதிவிட்டிருந்தனர். என்னைக் குறிவைத்துத் துன்புறுத்துவதை அறிந்து வேதனை அடைந்தேன்.

இது தொடர்பாகக் கேரள சைபர் கிரைமில் புகார் செய்தேன். அவர்கள் இந்த போலி சமூக வலைதள கணக்குகளுக்குப் பின்னால் இருப்பவர்களைக் கண்டு பிடித்துள்ளனர். அந்த நபர் யார் என்பது தெரிய வந்துள்ளது. இதைச் செய்தது தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 வயது இளம் பெண் என்ற தகவல் அதிர்ச்சியாக உள்ளது. அவருடைய வயது மற்றும் எதிர்காலம் கருதிக் கொண்டு, அவர் பெயர் அடையாளங்களை வெளியிட வேண்டாம் என்று முடிவு செய்துள்ளேன்.

ஸ்மார்ட்போன் வைத்திருப்பதாலோ, சமூக வலை தளங்களைப் பயன்படுத்துவதாலோ அடுத்தவர்களை அவமதிப்பதற்கோ, வெறுப்பைப் பரப்புவதற்கோ உங்களுக்கு முழு உரிமை வழங்கப்பட்டுள்ளதாக அர்த்தமில்லை. ஆன்லைனில் நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் பதிவாகிறது. இது தொடர்பான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறோம். இதைச் செய்தவர்கள் அதற்கான வினைகளை எதிர்கொள்ள வேண்டும். சைபர் குற்றம் என்பது தண்டனைக்குரிய செயல். இவ்வாறு அனுபமா பரமேஸ்வரன் பதிவிட்டுள்ளார்.

# ‘எஃப்1’ படம் இங்கு எப்படி ஓடுகிறது? அனுராக் காஷ்யப் கேள்வி



பிரபல இந்தி திரைப்பட இயக்குநரும் நடிகருமான அனுராக் காஷ்யப், தமிழில் இமைக்கா நொடிகள், மகாராஜா உள்பட சில படங்களில் நடித்துள்ளார்.

அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது: கடந்த காலத்தில், குறைவான திரையரங்குகள் இருந்தன. ஆனால் ஒரு படம் நன்றாக இருக்கிறது என்றால், அது வாய்மொழியாகவே பரவி வெற்றி பெற்றது. இன்று நிலைமை மாறிவிட்டது. அதிகமாக விளம்பரப்படுத்துகின்றனர்.

ஜப்பானிய படமான ‘டெமன் ஸ்லேயர்’ இங்கு எப்படி ஓடுகிறது? அதை விளம்பரப்படுத்த யாராவது வந்தார்களா? ஹாலிவுட் படமான ‘எஃப் 1’ இங்கு ஏன் ஓடுகிறது. பிராட் பிட் அதை விளம்பரப்படுத்த இந்தியா வந்தாரா? இல்லை. இருந்தும் அதற்கு வரவேற்பு இருக்கிறது. ஏனென்றால் மக்கள் நல்ல கதைகளைத் தேடுகிறார்கள். நன்றாக இருந்தால், பார்க்கிறார்கள். இங்கு புரமோஷனுக்கு செலவழிப்பது வீண்தான். பாலிவுட்டில், விளம்பரத்துக்கான எந்த வரம்புமில்லை.

விளம்பரம் முக்கியம் என்பதை ஒப்புக்கொள்கிறேன், ஆனால் குறிப்பிட்ட அளவுக்குத்தான். ஒருவரிடம் அதிகப் பணம் இருந்தால், அவர்கள் நகரம் முழுவதும் விளம்பரப் பலகைகளை வைப்பார்கள், பெரும்பாலான சேனல்களில் விளம்பரப் படுத்துவார்கள். இந்த வெளிச்சத்தில் சிறிய படங்கள் தொலைந்து போகும். இந்த சமத்துவமின்மைதான் சினிமா துறையைப் பலவீனப்படுத்துகிறது. இது சினிமாவின் பன்முகத் தன்மையை அழித்துவிடும். தமிழ், தெலுங்கு சினிமாவில் விளம்பரப்படுத்த ஒரு வரையறை இருக்கிறது. அதை பாலிவுட்டும் பின்பற்ற வேண்டும். அதோடு, விளம்பரம் எவ்வளவு பிரம்மாண்டமாக இருந்தாலும் கதை சுவாரஸ்யமாக இல்லாவிட்டால், பார்வையாளர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தாது. கதை அவர்களுக்கு நெருக்கமாக இருந்தால் மக்களே அதை விளம்பரப்படுத்துவார்கள். அதுதான் சினிமாவின் உண்மையான வெற்றி. இவ்வாறு அனுராக் காஷ்யப் கூறியுள்ளார்.



# ‘அங்கம்மாள்’ படத்துக்காக சுருட்டு பிடித்துப் பழகிய கீதா கைலாசம்

எழுத்தாளர் பெருமாள் முருகனின் கோடித்துணி என்ற கதை ‘அங்கம்மாள்’ என்ற பெயரில் திரைப்படமாகியுள்ளது. இதில் அங்கம்மாள் கதாபாத்திரத்தில் கீதா கைலாசம் நடித்துள்ளார்.

விபின் ராதாகிருஷ்ணன் இயக்கியுள்ள இப்படத்தில் சரண், பரணி, முல்லை அரசி, தென்றல் ரகுநாதன் உள்பட பலர் நடித்துள்ளனர். ஸ்டோன்பெஞ்ச் நிறுவனம், என்ஜாய் பிலிம்ஸ் மற்றும் பிரோ மூவி ஸ்டேஷன் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள இந்த படம் நவ.21ல் திரைக்கு வருகிறது.

இதையொட்டி படம் பற்றிய பேசிய கீதா கைலாசம், “இப்படம் அம்மா மகன் பற்றிய கதையைப் பேசுகிறது. இதில் ரவிக்கை அணியாமல் சுருட்டுப் பிடித்தபடி நடித்துள்ளேன். கதாபாத்திரத்துக்காக சுருட்டு மற்றும் பீடி புகைக்கப் பயிற்சி எடுத்தேன். முதலில் கஷ்டமாக இருந்தது. தொடர்ந்து பயிற்சி செய்தால் பழக்கமாகிவிடும் என்று எச்சரித்ததால் அதைப் படப்பிடிப்பில் மட்டுமே பயன்படுத்தினேன். ரவிக்கை அணியாமல் நடித்தது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. சுருட்டு பிடித்தபடி கிராமத்துச் சாலையில் டிவிஎஸ் 50 ஓட்டி சென்றது சவாலாக இருந்தது.

சிறுவயதில் இருசக்கர வாகனம் ஓட்டி இருந்தாலும் இப்போது பதற்றமாக இருந்தது. இப்படம் திருநெல்வேலி மாவட்டத்தின் கதையாக உருவாகி இருக்கிறது. நெல்லை பேச்சு வழக்கை, முயற்சி செய்திருக்கிறேன். படப்பிடிப்பு பத்மநேரி கிராமத்தில் நடந்தது. அங்குள்ள மனிதர்களிடம் பழகியது புதிய உணர்வை கொடுத்தது” என்றார்.



# விஜய்யின் ‘ஜனநாயகன்’ புதிய போஸ்டர் வைரல் முதல் சிங்கிள் சனிக்கிழமை ரிலீஸ்!

விஜய் நடித்துள்ள ‘ஜனநாயகன்’ படத்தின் புதிய போஸ்டர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கே.வி.என் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி வரும் படம் ‘ஜனநாயகன்’. விஜய், பூஜா ஹெக்டே, பாபி தியோல், கௌதம் மேனன், ப்ரியாமணி, நரேன், மமிதா பைஜு உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்தினை ஹெச்.வினோத் இயக்கியுள்ளார். அனிருத் இசையமைப்பாளராக பணிபுரிந்து வருகிறார். இப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வரும் ஜனவரி 09 அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் நெரிசல் சம்பவம் காரணமாக இப்படம் குறித்த அறிவிப்பு எதையும் வெளியிடாமல் இருந்து வந்தது படக்குழு. இந்த நிலையில் விஜய் மீண்டும் அரசியல் களத்துக்கு வந்த நிலையில், தற்போது இப்படத்தின் புதிய போஸ்டர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் விஜய் நடுவில் நிற்க அவரை சுற்றி நிற்கும் மக்கள் அனைவரும் அவர் நெஞ்சின் மீது கை வைத்திருக்கின்றனர். இந்த போஸ்டர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

மேலும் இப்படத்தின் முதல் பாடல் வரும் நவம்பர் 8 (சனிக்கிழமை) அன்று வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. இது படத்தில் விஜய்யின் அறிமுகப் பாடலாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# நடிகர் துல்கர் சல்மானுக்கு நுகர்வோர் நீதிமன்றம் நோட்டீஸ்

நடிகர் துல்கர் சல்மானுக்கு நுகர்வோர் நீதிமன்றம் நோட்டீஸ் பிரபல நடிகர் துல்கர் சல்மான், கேரளாவில் உள்ள பிரபலமான பிரியாணி அரிசியின் விளம்பர தூதராக இருக்கிறார்.

அவர் மீது, பத்தனம்திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த கேட்டரிங் நிறுவனம் ஒன்றின் ஊழியர் பி.என். ஜெயராஜன் என்பவர், நுகர்வோர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில், “திருமண விழாவுக்காக, குறிப்பிட்ட பிராண்டின் 50 கிலோ பிரியாணி அரிசியை, ஆகஸ்ட் மாதம் வாங்கினோம்.

அதில், அந்த அரிசி எப்போது பேக் செய்யப்பட்டது, காலாவதி தேதி உள்ளிட்ட எதுவும் இல்லை. அதில் சமைத்த பிரியாணியைச் சாப்பிட்ட பலருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் அந்த அரிசி நிறுவனத்தின் உரிமையாளர், விளம்பர தூதரான நடிகர் துல்கர் சல்மான், அரிசியை விற்ற கடை உரிமையாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.

மேலும் இப்பிரச்சினை காரணமாகத் தனது கேட்டரிங் தொழிலின் நம்பகத்தன்மை பாதித்துவிட்டதாகவும் பல திருமண முன்பதிவுகள் ரத்து செய்யப்பட்டதாகவும் குற்றம் சாட்டினார். இதையடுத்து இது தொடர்பாக விளக்கம் கேட்டு துல்கர் சல்மான், அரிசி நிறுவன உரிமையாளர் ஆகியோர் டிச.3ம் தேதி நேரில் ஆஜராக நுகர்வோர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.





# ‘காவலன்’ செயலியால் உருவான ‘தி டிரெய்னர்’!

ஸ்ரீகாந்த், ஷாம் நடித்துள்ள த்ரில்லர் படம், ‘தி டிரெய்னர்’. ஜூனியர் எம். ஜி. ஆர், பிரின்ஸ் சால்வின், அஞ்சனா கிருத்தி, புஜிதா பொன்னாடா, வாகை சந்திரசேகர், சாய் தீனா, லதாராவ், ஜே.ஆர்.எம்.ராஜ்மோகன், பிரியங்கா ராய் என பலர் நடித்துள்ளனர். டிரான்ஸ் இந்தியா மீடியா மற்றும் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் நீலா தயாரிக்கிறார். பி.வேல்மாணிக்கம் இயக்கியுள்ள இப்படத்துக்கு அருள்மொழி சோழன் ஒளிப்பதிவு செய்துள்ளார். கார்த்திக் ராஜா இசை அமைத்திருக்கிறார்.

“பெண்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்துக்காக தமிழ்நாடு போலீஸார் உருவாக்கிய ‘காவலன்’ செயலியில் இருந்து உத்வேகம் பெற்று சமூகத்துக்குத் தேவையான படமாக இது உருவாகியுள்ளது. நடிகர் காந்த், நாய் பயிற்சியாளராக நடித்துள்ளார். அவருடன் ‘லீ’ என்ற நாயும் முக்கிய கதாபாத்திரமாக வருகிறது.

ஜூனியர் எம்.ஜி.ஆர், வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அவருடைய செல்வாக்கின் கீழ் குற்றச் செயல்களில் ஈடுபடும் மர்ம கும்பலைச் சுற்றிக் கதை சுழல்கிறது. போலீஸ் அதிகாரி ஷாம், காந்தை குற்றவாளி என்று தவறாக நினைக்கிறார். தன்னை நிரூபிக்க அவர் என்ன செய்கிறார் என்பது கதை” என்றது படக்குழு. விரைவில் படம் வெளிவரும் எனத் தெரிவித்துள்ளனர்.

## தாம்பரத்தில் கார்த்திகை மாதத் தீபத் திருவிழாவை முன்னிட்டு அண்ணாமலையாருக்கு திருக்குடை வழங்கும் விழாவில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு





தாம்பரம், நவ.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தேசிய இந்து திருக்கோயில்களின் கூட்டமைப்பு சார்பாக அண்ணாமலையாருக்கு வழங்கும் திருக்குடை வழங்கும் விழா நடைப்பெற்றது. அதன்படி திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையாருக்கு திருக்குடை கொண்டு செல்லும் விதி உலா இன்று காலை நடைப்பெற்றது.

தாம்பரம் வள்ளுவர் குருகுலம் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கிய திருக்குடை வீதி உலா சிவமேளம் முழங்க காந்தி ரோடு, சண்முகம் சாலை, ஜிஎஸ்டி சாலையில் வீதி உலாக குடை எடுத்து ஊர்வலமாக செல்லப்பட்டது. செல்லுமிடம் இடம் எல்லாம் பக்தர்கள், பொது மக்கள் வழிப்பட்டனர்.

பின்னர் தாம்பரம். செல்வ விநாயகர் கோதண்டராமர் மற்றும் மீனாட்சி சுந்தரேஷ்வர் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்ட திருக்குடைக்கு சிறப்பு பூஜை நடைப்பெற்றது. அதனை தொடர்ந்து தேசிய இந்து திருக்கோயில்களின் கூட்டமைப்பு பக்தர்கள் 5 ஆயிரம் பேருக்கு சுரங்க பாதுகாப்பு நலசங்க தலைவர் ஜெயராம் ரெட்டியார் தலைமையில் இந்து திருக்கோயில் கூட்டனைப்பின் அன்னதானம் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பிற்பகல் திருவண்ணாமலையில் அண்ணாம லையாருக்கு திருக்குடையை கொண்டு சென்றனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## "அதிமுகவுடன் கூட்டணி என்று இப்போது சொல்ல முடியாது" பிரேமலதா திடீர் பிரகடனம்



சென்னை, நவ.23-

"பழனிசாமி 2026ல் கட்டாயம் தேமுதிகவுக்கு மாநிலங்களவை சீட் தருவதாகக் கூறிவிட்டார். அதற்காக அவர்களுடன் தான் கூட்டணி என்று இப்போதைக்கு சொல்ல முடியாது" என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

இது தொடர்பாக சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேமுதிக மக்கள் விரும்பும் மகத்தான கூட்டணியை அமைக்கும். ஜன.9ம் தேதி கடலூர் மாநாட்டில் கூட்டணியை அறிவிப்போம். நேற்று முளைத்த காளான் ஒரு நாள் மழைக்கே தாங்காது என்று நான் விஜய்யை குறிப்பிடவில்லை. புதிதாக 5 கட்சிகள் உருவாகியிருக்கிறது; அவர்களை சொன்னதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

விஜய்யை நாங்கள் எப்போதும் எதிர்க்கவில்லை; எங்கள் வீட்டு பையன் என்று தானே சொல்லி வருகிறேன். அவர் விஜயகாந்த் மாதிரி சினிமாவிலும், அரசியலிலும் சாதிக்க வேண்டும். விஜய்யை கூத்தாடி என்று நான் சொன்னதே இல்லை. நடிகர்கள் யார் அரசியலுக்கு வந்தாலும் அப்படித்தான் மற்றவர்கள் சொல்கிறார்கள்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது. அதை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்கிறோம். அதற்காக அவர்களுக்கு எதிரான கட்சிகளுடன் கூட்டணி வைப்போம் என்று கூற முடியாது. கூட்டணி விஷயத்தில் எப்போது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். திமுக கூட்டணியில் இருக்கும் கட்சிகள் கூட மாற வாய்ப்புள்ளது.

யார், யாருடன் கூட்டணியில் இருப்பார்கள் என்பதை சொல்ல முடியாது. பிஹாரில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10,000 கொடுத்து தான் வெற்றி பெற்றதாக ப.சிதம்பரம் கூறுகிறார். ஆனால் தமிழகத்தில் வாக்குக்கு பணம் கொடுத்து தான் வெற்றி பெறுகிறீர்கள். அதை இல்லை என்று அவர் மறுப்பாரா?

வருகிற ஆட்சியில் கூட்டணி அமைச்சரவை அமைய வாய்ப்புள்ளது. எங்கள் கட்சியிலிருந்து எம்எல்ஏக்கள் கட்சி மாறியது,மாநிலங்களவை சீட் தர மறுத்தது ஆகிய அனைத்தையும் சேர்த்துத்தான் துரோகம் என்றேன். பழனிசாமி 2026 ல் கட்டாயம் தேமுதிகவுக்கு மாநிலங்களவை சீட் தரப்படும் என்று கூறி விட்டார். அதை நாங்கள் 2025ல் தருவார்கள் என்று நினைத்தோம். அதனால்தான் குழப்பம் ஏற்பட்டது. அதற்காக அவர்களுடன் கூட்டணி என்று இப்போதைக்கு சொல்ல முடியாது.

இந்த தேர்தல் நிச்சயம் தமிழகத்தில் நடக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும். வாக்குத் திருட்டு நடக்கக் கூடாது என்பதில் தேமுதிக உறுதியாக இருக்கிறது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்ததற்கான காரணத்தை மத்திய அரசு விளக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## பாலியல் குற்றச்சாட்டில் சஸ்பெண்ட் ஆன காவலர் கோயில் முன்பு யாசகம் - கரூர் போலீஸ் விளக்கம்



கரூர், நவ.23-

கரூர் பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வந்தவர் பிரபாகரன் (35). கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாலியல் குற்றச்சாட்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இவருக்கு பணியிடை நீக்க காலத்தில் வழங்கப்படும் பிழைப்பூதியம் எனப்படும் அரை சம்பளம் வழங்கப்படவில்லை என கூறப்படுகிறது. இதனால், கரூர் வெண்ணெய்மலை பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் முன்பு நேற்று பிரபாகரன் தனது மகனுடன் அமர்ந்து, யாசகம் பெற்றார்.

பிரபாகரன் கூறும்போது, "பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றி வந்தேன். என் மீது போடப்பட்ட வழக்கால் பணியிடை நீக்கம் செய்யப்பட்டேன். எனக்கு பிழைப்பூதியமாக அரை மாத சம்பளமும் இரு மாதங்களாக வழங்கப்படவில்லை. இதனால் வேலையும், வருமானமும் இன்றி குடும்பத்தைக் காப்பாற்ற வழியின்றி உள்ளேன். அதற்காக மகனுடன் கோயில் முன் யாசகம் பெற வந்தேன்" என்றார்.

இதையடுத்து, அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார் அவருக்கு அறிவுரை கூறி, அவரை அங்கிருந்து புறப்பட அறிவுறுத்தினர். அப்போது, பிரபாகரன் போலீஸார் காலில் விழுந்து கதறி அழுதார். அதன்பின் மகனுடன் அங்கிருந்து புறப்பட்டார். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து மாவட்ட காவல் துறை விளக்கம் அளித்துள்ளது. அதில், 'செப்.18ம் தேதி இரவு பசுபதிபாளையம் பகுதியில் பிரபாகரன், அப்பகுதியை சேர்ந்த காவல் துறைக்கு தொடர்பில்லாத கவுதமனை உடன் அழைத்து கொண்டு ரோந்து சென்றுள்ளார். அப்பகுதியில் இருந்த சிறுமியிடம் தவறாக நடக்க முற்பட்டுள்ளதாக அளித்த புகாரின்பேரில், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு பிரபாகரன் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். அக்.8ம் தேதி நிபந்தனை ஜாமீனில் விடுதலையான பிரபாகரன், பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் அக்.10ம் தேதி முதல் அக்.25ம் தேதி வரை கையொப்பமிட்டு வந்துள்ளார். இவ்வழக்கு விசாரணையில் உள்ளது" என தெரிவித்துள்ளனர்.

## பொறுப்பு டிஜிபி குறித்து எடப்பாடி பழனிசாமிக்கு பேச எந்த அருகதையும் இல்லை: அமைச்சர் ரகுபதி பேட்டி

புதுக்கோட்டை, நவ.23-

பொறுப்பு டிஜிபி குறித்து கேள்வி கேட்க எடப்பாடிக்கு என்ன தகுதி உள்ளது. டிஜிபி பட்டியலை ஒன்றிய அரசுக்கு அனுப்பி உள்ளோம். தமிழ்நாட்டில் பொறுப்பு டி.ஜி.பி. என்ற முறையைக் கொண்டு வந்ததே அதிமுக ஆட்சியில்தான். இன்று அதைப் பற்றி பேச எந்த அருகதையும் எடப்பாடி பழனிசாமிக்கு கிடையாது என்று அமைச்சர் ரகுபதி பேட்டி அளித்துள்ளார். 2011ல் ராமானுஜத்தை பொறுப்பு டி.ஜி.பி. ஆகவும், ராஜேந்திரனை பொறுப்பு டி.ஜி.பி. ஆகவும் கொண்டு வந்தது அதிமுகதான்.

மாநில அரசு விருப்பப்படிதான் டிஜிபி நியமனம் இருக்கும்; ஆனால் அத்தகைய சூழல் தற்போது இல்லை. தங்களுக்கு வேண்டியவரை டிஜிபியாக நியமிக்க ஒன்றிய அரசு நினைக்கிறது அது நிச்சயம் நடக்காது. தமிழ்நாடு பரிந்துரைக்கும் டிஜிபியை ஒன்றிய அரசு ஏற்காததே பொறுப்பு டிஜிபி நீட்டிக்க காரணம். முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமி இப்பது பேசுவது வேடிக்கையாக உள்ளது. தமிழ்நாட்டுக்கு வேண்டியவர்களை நாங்கள் கேட்கிறோம்.

மாநில உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது. கற்பனை கதைகளை பரப்பி, அதன் மூலம் அவதூறு அரசியல் செய்ய எடப்பாடி நினைக்கிறார். ஆம்ஸ்ட்ராங் வழக்கில் குற்றப்பத்திரிகையே தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால்தா சிபிஐ விசாரணை வேண்டாம் என்றோம். சிபிஐயை கண்டு திமுக என்றும் அஞ்சியது கிடையாது. எஸ்.ஐ.ஆரை கண்டு திமுகவுக்கு பயம் இல்லை; ஆனால் அவசர கதியில் நடத்தக் கூடாது என்றுதான் கூறுகிறோம். போபால், ஆக்ரா, புனேவுக்கு அனுமதி கொடுத்த மெட்ரோ ரயில் கொள்கை, கோவை, மதுரைக்கு மட்டும் அனுமதி மறுத்தது ஏன் என்று அமைச்சர் ரகுபதி கேள்வி கேட்டுள்ளார்.



■ தேனி மாவட்டம், கடமலைமயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (Special Intensive Revision) மேற்கொள்வது தொடர்பாக, வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் BLO செயலியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங் ஆய்வு மேற்கொண்டார்



## கொடைக்கானல் மலைச்சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்தி விபத்துகளை ஏற்படுத்தும் பழக்கடை உரிமையாளர்

திண்டுக்கல், நவ.23-

திண்டுக்கல் மாவட்டம் சுற்றுலா தலமான கொடைக்கானல் வத்தலகுண்டு பிரதான சாலையில் மச்சூர் அருகே வத்தலகுண்டு கொடைக்கானல் பிரதான சாலையில் கடந்த சில வருடங்களாக ஒருவர் நெடுஞ்சாலை பகுதியை ஆக்கிரமித்து பழக்கடை நடத்தி வருகிறார் இவர் ஆபத்தான வளைவில் பழக்கடை நடத்துவதோடு மட்டுமல்லாமல் போக்குவரத்துக்கு இடையூறாக அவருக்கு சொந்தமான மூன்று நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி தொடர்ந்து விபத்தை ஏற்படுத்துவதுடன் சுற்றுலா பயணிகளிடம் அவர்களது வாகனத்தில் மோதியதாக கூறி அடாவடித்தனமாக மிரட்டி பணம் பறித்து வருகிறார் . பழக்கடை உரிமையாளரின் வாகனங்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பது குறித்து தாண்டிக்குடி காவல் நிலத்திற்கு பலமுறை தகவல் தெரிவித்தும் தாண்டிக்குடி காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து மெத்தனம் காட்டி வருவதாக வாகன ஓட்டிகள் குற்றம் சாட்டுவதோடு .நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மாத வாடகைக்கு நெடுஞ்சாலை பகுதிகளை தனி நபர்களுக்கு வாடகைக்கு விடுவதாக வாகன ஓட்டிகள் குற்றம் சாட்டுகின்றனர் இதனால் அப்பகுதியில் தொடர்ந்து ,போக்குவரத்து நெரிசல் ஏற்படுவ தோடு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன.நேற்று கொடைக்கானலில் இருந்து கேரளா சுற்றுலா பேருந்து ஒன்று பள்ளி குழந்தைகளை ஏற்றி கொண்டு வத்தலகுண்டு நோக்கி மச்சூர் பகுதியில் வந்த போது குறுகிய ஆபத்தான வளைவில் எதிரே மற்ற பேருந்து வந்ததால் வளைவில் பழக்கடை உரிமையாளர் வாகனங்களை போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டதால் கேரளா சுற்றுலா பேருந்தை ஒதுக்க முடியாமல் இடையூறாக நின்ற வாகனத்தின் மீது எதிர்பாராத விதமாக மோதியது இதனால் பழக்கடை உரிமையாளர் கேரள சுற்றுலா பயணிகளை மிரட்டி பணம் பறித்தது குறிப்பிடத்தக்கது . இது குறித்து தாண்டிக்குடி காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து மச்சூர் பகுதியில் பொது போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை விரைந்து அப்புறப்படுத்த வேண்டும் என சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் வாகன ஓட்டிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

## 3000ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆதிமனிதன் கற்திட்டைகளை ஆய்வு செய்த தொல்லியல் துறையினர்

திண்டுக்கல், நவ.23-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கீழ் மலை பகுதியான பண்ணைக்காட்டில் இருந்து தாண்டிக்குடி கிராமத்திற்கு செல்லும் வழியில் உள்ள எதிரொலி பாறை அருகே அமைந்துள்ள தொல்லியல் துறை கட்டுபாட்டில் அமைந்துள்ள சுமார் 3000 ஆண்டுகள் பழமைவாய்ந்த 20 கும் மேற்பட்ட கற்திட்டைகள் அமைந்துள்ளது.

மேலும் இந்த கற்திட்டைகள் அமைந்துள்ள பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக போதிய பராமரிப்பு இல்லாமல் தற்போது புதர்கள் மண்டி சிதிலமடைந்து காணப்படுகிறது. இது குறித்து பல முறை அரசுக்கு கோரிக்கை விடுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் இன்று தொல்லியல் துறை சார்பில் உலக பாரம்பரிய வார விழாவை முன்னிட்டு 20க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இந்த பகுதிக்கு வந்து இங்குள்ள கற்திட்டைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். மேலும் முதற்கட்டமாக இங்கு புதர்களை அகற்றும் பணியில் ஈடுபட்டதுடன், சிதிலமடைந்துள்ள கற்களை தற்காலிகளாக சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து பேசிய இந்திய தொல்லியல் துறையில் திருச்சி தொல்லியல் துணை கண்காணிப்பாளர் முத்துகுமார், திருச்சியில் இருந்து கன்னியாகுமரி வரையில் 162 நினைவு சின்னங்கள் உள்ளது என்றும் இதில் திண்டுக்கல் மலைக்கோட்டை உட்பட பல்வேறு மாவட்டங்களில் இருப்பதாகவும் இதில் பாதுகாக்கப்பட கூடிய நினைவு சின்னங்களாக உள்ளதில் இந்த கொடைக்கானல் மலை பகுதியில் 5 இடங்கள் உள்ளதாக தெரிவித்தார்.

மேலும் உலக பாரம்பரிய வார விழாவில் இந்த பழமையான சின்னங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இங்கு வந்ததாக அவர் கூறினார். இதனையடுத்து அடுத்த கட்டமாக இவற்றை பாதுகாக்கும் பணியில் தீவிரப்படுத்தி சுற்றுலா இடமாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கபடும் என்று தெரிவித்தார்.

மேலும் இங்குள்ள கற்திட்டைகள் சுமார் 3000ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும், இது தஞ்சை பெரிய கோவிலை விட 1000ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் கட்டிட கலை குறித்து முன் உதாரணமாக அந்த காலத்திலேயே இங்குள்ள கற்திட்டுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது, என்றும் இங்கிருந்து தான் கட்டிட கலை தொடங்கப்பட்டிருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

மேலும் கீழடியை விட மிகவும் பழமையான ஒரு நினைவு சின்னம் இது என்றும், இது போல கட்டிட கலையை அப்போதே கொண்டுவரப்பட்டுள்ளது இது அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

## வில்லங்க சான்றிதழ் போல பட்டா வரலாற்றையும் இனி தெரிந்து கொள்ளலாம்: தமிழ்நாடு அரசு புதிய நடைமுறை




சென்னை, நவ.23-

வில்லங்க சான்றிதழ் போல இனி பட்டா வரலாற்றையும் தெரிந்து கொள்ளலாம். இதற்காக தமிழக அரசு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்த உள்ளது. ஒரு காலத்தில் சொத்துக்கு பட்டா வாங்குவது என்பது குதிரை கொம்பாக இருந்தது. ஆனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த நடவடிக்கை காரணமாக இப்போது அது எளிதாகிவிட்டது. அதாவது https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளம் மூலம் பொதுமக்கள் எளிதாக பட்டா பெற்றுக்கொள்ளலாம்.

அதேபோல இப்போது பத்திரப்பதிவு செய்தவுடன் உட்பிரிவு இல்லாத சொத்துகளுக்கு உடனடி பட்டா மாறுதலும் செய்யப்படுகிறது. தற்போது சொத்து பற்றிய உரிமை விவரங்களை மக்கள் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில், தமிழக அரசின் வருவாய்த்துறை புதிய ஆன்லைன் வசதியை அறிமுகப்படுத்த உள்ளது. அதன்படி ஒரு சொத்தின் உரிமையாளர் யார், அவரது பெயர் என்ன? இதற்கு முன்பு இந்த சொத்து யார் பெயரில் இருந்தது.

அதோடு வங்கியில் இந்த சொத்து அடமானத்தில் இருக்கிறதா? இந்த சொத்தின் மீது என்னென்ன பறிமாற்றங்கள் நடந்து இருக்கிறது என்பதை பத்திரப்பதிவு துறை வழங்கும் வில்லங்க சான்றிதழ் மூலம் தெரிந்து கொள்ள முடியும். அதே நேரத்தில் ஒரு சொத்தின் தற்போதைய உரிமையாளரை வருவாய்த்துறை மூலம் பட்டா மூலமும் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் பட்டாவில், பத்திரப்பதிவுத்துறை வழங்கும் வில்லங்க சான்றிதழ் போல் அனைத்து விவரங்களையும், பரிமாற்றங்களையும் தெரிந்துகொள்ள முடியாது. தமிழக அரசு, இதற்கு தீர்வு காணும் வகையில் தற்போது 'பட்டா வரலாறு' என்ற புதிய சேவையை பொதுமக்களுக்காக கொண்டு வந்துள்ளது. இதன்மூலம், அந்த நிலத்தின் முன்பிருந்த பட்டா வைத்திருந்தவர்களின் பெயர்கள், பெயர் எப்போது மாற்றப்பட்டது,

எந்த ஆணையின் பேரில் மாற்றம் நடந்தது, பட்டா எந்த காலக்கட்டத்தில் யாரிடம் இருந்தது போன்ற விவரங்களை முழுமையாக தெரிந்துகொள்ள முடியும். இந்த பட்டாவுக்கு வில்லங்க சான்றிதழ் பெறும் நடைமுறை அடுத்த வாரம் முதல் சோதனை அடிப்படையில் தொடங்குகிறது. முதல்கட்டமாக ஒரு தாலுகாவில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும் இந்த பட்டா வில்லங்க சான்றிதழ் பெற பொதுமக்கள் கட்டணம் செலுத்த வேண்டும். சோதனை முறை வெற்றி பெற்றுவிட்டால், முதல்வர் மு.க.ஸ்டாலின் அதனை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவார். மேலும் தற்போதைய நிலையில் இந்த பட்டா வரலாறு 2014ம் ஆண்டு முதல்தான் இப்போதைக்கு எடுக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161